Women's Centre for Change

# சாரா “வேண்டாம்” என்கிறாள்



ஆதரவு:

YAYASAN HASANAH
A foundation of Khazanah Nasional

Prihatin
Pakej Rangsangan Ekonomi Prihatin Rakyat

# வாசகர்களுக்கான குறிப்பு

சிறார் பாலியல் கொடுமைக்கு எந்தக் குழந்தையும் ஆளாகலாம். இதில், உடல் ஊனமுற்ற சிறாரும் அடங்குவர். ஆனால், உடல் ஊனமுற்ற சிறாருக்கு ஏற்படும் பாதிப்புகள் இன்னும் அதிகம். ஏனெனில், அவர்களுக்கு, அறிவாற்றல் மற்றும் எண்ணங்களை வெளிப்படுத்துவதில் உள்ள குறைபாடுகளினால், பாலியல் கொடுமையைப் புரிந்துகொள்ள இயலாமல் போவதோடு, அதனை வெளிப்படுத்தவோ உதவி கோரவோ முடிவதில்லை. உடல் ஊனமுற்றோர் ஒரு பொது மையத்தில் தங்கியிருக்கும்பொழுது அல்லது முற்றிலும் வேறொருவரின் உதவியோடு இயங்கும் நிலையில் இருக்கும்பொழுது பாலியல் கொடுமைகளுக்கு ஆளாகுவதற்கான ஆபத்துகள் அதிகரிக்கின்றன.

இந்தக் கதை பெருமூளை வாதத்தால் *(cerebral palsy)* பாதிக்கப்பட்ட சாரா என்ற சிறுமியைப் பற்றியதாகும். பெருமூளை வாதம் ஒருவரின் இயக்கம், சமன்நிலை, ஆகியவற்றைப் பாழ்படுத்தும் ஒரு நிலை. ஒரு சிலருக்குப் புரிந்து கொள்ளும் திறனும் பாதிக்கப்பட்டிருக்கும். பெருமூளை வாதத்திற்கான அறிகுறிகள் சிலருக்கு மிதமாகவும் இன்னும் சிலருக்குக் கடுமையாகவும் இருக்கலாம். உதாரணத்திற்கு, தசை கட்டுப்பாடு மற்றும் ஒருங்கிணைப்பு இல்லாமை, பேச்சில் தெளிவின்மை, அறிவாற்றல் குறைபாடு மற்றும் மெல்லுவது, விழுங்குவதில் சிரமங்களை எதிர்நோக்குதல்.

WCC
Women's Centre for Change

# சாரா
# “வேண்டாம்”
# என்கிறாள்





ஒன்பது வயதாகும் சாரா, தினசரி காலை வேளையில், பெருமூளை வாதம் கொண்ட குழந்தைகளை செயல்பாட்டு மையத்திற்கு ஏற்றிச் செல்லும் வாகனத்திற்காகத் தன் தந்தையுடன் காத்திருப்பாள்.



சாராவுக்குப் பெருமூளை வாதம் உள்ளது. அவள் நடக்க, பொருள்களைப் பற்றிக்கொள்ள மற்றும் தெளிவாகப் பேசுவதில் சிரமங்களை எதிர்கொள்கிறாள்.




இன்று, சாரா மற்றும் அவளின் இரு நண்பர்களான அபு மற்றும் மரியாவை, பெருமூளை வாத மையத்தின் வாகனமோட்டுநர் அங்கள் சான், மையத்திற்குக் கொண்டு செல்கிறார்.




அங்கள் சான் வந்தவுடன் வாகனத்தினுள் நுழைய சாராவுக்கு உதவுகிறார். வாகனத்தில், தன் இரு நண்பர்களையும் பார்த்து சாரா மகிழ்ச்சியடைகிறாள்.





மையத்தில், சாரா தெளிவாகப் பேசுவதற்குப் பேச்சுப் பயிற்றுநர் உதவி செய்கிறார். அதற்கான தொடர்பு விளக்கப்படத்தையும் அவர் பயன்படுத்துகிறார்.




வீட்டுக்குப் போகும் நேரம் வந்தவுடன், அங்கள் சான், அபுவையும் மரியாவையும் முதலில் இறக்கிவிடுகிறார். பிறகு சாராவை இறக்கிவிடுகிறார்.



அதற்கடுத்த வாரம், அபுவையும்
மரியாவையும் இறக்கிவிட்ட பிறகு,
அங்கள் சான் சாராவுக்கு மிட்டாய் வாங்கிக்
கொடுக்கிறார். சாரா மகிழ்ந்து போகிறாள்.




சாரா வீட்டுக்கு வந்தவுடன், மிட்டாய் பிசுபிசுப்புடன் இருக்கும் அவள் விரல்களை அவள் அப்பா கவனிக்கிறார். சாராவின் புத்தகப்பையில் மிட்டாய் மடிக்கும் பைகள் இருப்பதையும் பார்க்கிறார். யார் கொடுத்தது என்று கேட்டதற்கு, அவள், “அங்ங்ங்...கள்” என்று பதில் அளிக்கிறாள்.





பிறகு, வீடு வந்து சேரும்பொழுதெல்லாம், சாராவுக்கு அங்கள் சான் ஏதாவது உணவுப் பொருளை வாங்கிக் கொடுத்துள்ளதை சாராவின் அப்பா கவனிக்கிறார்.




ஒரு நாள், வீட்டுக்கு வரும் வழியில்,
சாராவுக்குச் சிறப்பான பரிசு ஒன்றை வாங்கித்
தரப்போவதாக அங்கள் சான் கூறுகிறார்.
சாராவுக்கு ஒரே குதூகலம்.




அங்கள் சான் சாராவுக்குப் பனிக்கூழ்
வாங்கிக் கொடுக்கிறார். பிறகு,
தன்னுடைய வாகனத்தை ஆளரவமற்ற
சந்தில் நிறுத்துகிறார்.




சாராவுக்குக் கரண்டியைக் கையில் பிடிப்பதில் சிரமம் உள்ளதால் அங்கள் சான் அவளுக்குப் பனிக்கூழ் ஊட்டிவிடுகிறார். சாரா மகிழ்ச்சியில் திளைக்கிறாள்.





அங்கள் சான் சாராவை வீட்டில் இறக்கிவிடும்பொழுது, “ஏன் தாமதம்?” என்று சாராவின் அப்பா வினவுகிறார். வாகன நெரிசலில் சிக்கிக்கொண்டதாக அங்கள் சான் கூறுகிறார்.




அதற்கடுத்த சில வாரங்களிலும்,
அங்கள் சான் சாராவுக்குப் பனிக்கூழ்
வாங்கிக்கொடுத்து மகிழ்ச்சிப்படுத்துகிறார்.



அங்கள் சான் அவளைக் குதூகலப்படுத்திச் சிரிக்க வைக்கிறார். “நாமிருவரும் நெருக்கமான நண்பர்கள்,” என்று அங்கள் சான் அவளிடம் கூறுகிறார். அங்கள் சான், சாராவின் தலையைக் கோதிவிட்டுத் தோளைத் தடவுகிறார்.





ஒரு நாள், சாரா பனிக்கூழ் சாப்பிட்டு
முடித்த பிறகு, திடீரென்று அங்கள் சான்
தன் கையை அவள் ஆடைக்குள்ளும்,
கால்சட்டையிலும் நுழைக்கிறார்.



சாரா அதிர்ச்சியில் உறைகிறாள்.
“ஒன்றும் தப்பில்லை. நெருக்கமான நண்பர்களுக்கிடையேயான விளையாட்டு இது. இதனை நீ யாரிடமும் சொல்லக்கூடாது,” என்று அங்கள் சான் சாராவிடம் கூறுகிறார்.
பிறகு சாராவை வீட்டில் இறக்கிவிடுகிறார்.



அன்று மாலை, சாரா அமைதியாக இருக்கிறாள். தன் பூனையோடும் அவள் விளையாடவில்லை.




அதற்கடுத்த நாள்களிலும், அங்கள் சான் சாராவுக்கு இன்னும் நிறைய பனிக்கூழ்களை வாங்கித் தந்து அவளோடு ‘நெருக்கமாக விளையாடுகிறார்’. ஆனால், அங்கள் சானின் இந்த ‘நெருக்க விளையாட்டு’ சாராவுக்குப் பிடிக்கவில்லை.




ஒரு நாள் காலையில், அங்கள் சான்
சாராவை தன் வாகனத்தில் ஏற்றும்பொழுது
சாரா முரண்டுபிடித்து வாகனத்தில் ஏற
மறுத்துக் கதறி அழுகிறாள்.




என்ன நடக்கிறது என்று சாராவின் அப்பாவுக்குப் புரியவில்லை. சாராவின் சக்கர நாற்காலியை வாகனத்திற்குள் ஏற்றி அவளைப் பாதுகாப்பாக அமர்த்துகிறார்.




அங்கள் சான் வாகனத்தை ஓட்டிச் செல்கிறார். சாராவின் அப்பா அவளைப் பார்த்து கையசைக்கும்பொழுது சாரா கையசைக்காமல் வெறித்துப் பார்க்கிறாள். சாராவின் அப்பாவுக்கு மனதில் ஒரு நெருடல் உண்டாகிறது.



சாராவின் அப்பா அவளின் ஆசிரியர் ஜனியொடு தொடர்புகொண்டு சாராவைப் பற்றி விசாரிக்கிறார். “இப்பொழுதெல்லாம் சாரா மிகவும் அமைதியாக இருக்கிறாள். வீட்டில் அவளுக்கு ஏதாவது நிகழ்ந்ததா?” என்று ஆசிரியை ஜனி கேட்டறிகிறார்.




அன்று மாலை, அங்கள் சான் சாராவை வாகனத்திலிருந்து இறக்கிவிட முயற்சிக்கும்பொழுது, சாரா முரண்டுபிடித்து, "வேண்டாம்ம்ம்ம்!" என்று கத்துகிறாள். பிறகு, சாராவின் அப்பா அவளுக்கு வாகனத்தை விட்டு இறங்க உதவுகிறார்.




அங்கள் சான் புறப்படும்பொழுது, சாரா, “வேண்டாம்! வேண்டாம்! வேண்டாம்!” என்று கத்திவிட்டு அழ ஆரம்பிக்கிறாள்.



சாராவின் அப்பா அவளை
வீட்டுக்குள் அழைத்துச் செல்கிறார்.
சாரா அழுகையை நிறுத்தும் வரை
அவளைப் பிடித்துக்கொள்கிறார்.




“சாரா, நீ ஏன் வருத்தமாக இருக்கிறாய்?” என்று சாராவின் அப்பா கேட்கிறார். அதற்கு சாரா, “அங்ங்...கள் கெட்டவர்...” என்று தன் கைகளைக் கொண்டு சைகைக் குறிப்பின் மூலம் உணர்த்துகிறாள்.



“அங்கள் சான் கெட்டவரா? ஏன் என்று எனக்குச் சொல்!” என்று சாராவின் அப்பா கேட்கிறார். சாரா தன் மார்பினைத் தொட்டு, தன் கைகளை இடுப்புக்குக் கீழே விட்டு, மறுபடியும் ‘அங்கள்’ ‘கெட்டவர்’ என்கிறாள்.



“நீ என்ன சொல்கிறாய்? அங்கள் சான் உன்னைத் தொடுகிறாரா?” என்று சாராவின் அப்பா கேட்கிறார். சாரா தலையை ஆட்டுகிறாள்.



சாராவின் அப்பா தொடர்பு விளக்கப்படங்களை எடுத்து வருகிறார். விளக்கப் படத்தில் உள்ள வார்த்தைகள் மற்றும் வரைபடங்களைச் சுட்டிக்காட்டித் தனக்கு நேர்ந்ததை சாரா வெளிப்படுத்துகிறாள்.



சாராவின் அப்பா அதிர்ச்சிக்குள்ளாகிறார்.
“அங்கள் சான் செய்தது தவறு.
அதனால்தான் நீ வருத்தமாகவும்
ஆத்திரத்துடனும் இருக்கிறாய்!” என்கிறார்.




சாராவின் அப்பா மிகுந்த வேதனைக்குள்ளானாலும் சாராவிடம், “நீ என்னிடம் இதைச் சொன்னது நல்லதாகப் போய்விட்டது. நாம் இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும்,” என்கிறார்.




சாராவின் அப்பா ஆசிரியை ஜனிக்கு அழைப்பு செய்து நடந்தனவற்றைக் கூறுகிறார். அன்று மாலையில், சாராவின் அப்பாவும், ஆசிரியை ஜனியும் இது தொடர்பாகக் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கின்றனர்.





அதற்கடுத்த வாரம், சாராவை
மையத்திற்கு அழைத்துச் செல்ல ஒரு
புதிய வாகனமோட்டுநர் வருகிறார்.
இம்முறை, மையத்தின் ஆசிரியர் ஒருவரும்
வாகனத்தில் துணையாக வருகிறார்.




மையத்தில் உள்ள ஆசிரியர்கள், ‘நல்ல தொடுதல்’ மற்றும் ‘கெட்ட தொடுதல்’ பற்றி மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றனர். “நல்ல தொடுதல் உங்களை மகிழ்ச்சிப்படுத்துவதோடு உங்களுக்கு இதமாக இருக்கும். கெட்ட தொடுதல் உங்களைப் புண்படுத்தி, பயத்தையும் குழப்பத்தையும் உண்டாக்கும்,” என்று ஆசிரியர்கள் விளக்கம் அளிக்கின்றனர்.



“நீங்கள் கெட்ட தொடுதலுக்கு ஆளானால், உடனடியாக, படங்கள் வரைவது, கூச்சலிடுவது அல்லது சைகைக் குறிப்பின் மூலமாக அதனை வெளிப்படுத்த வேண்டும். இப்படிச் செய்தால் உங்களுக்கு அதனைத் தடுத்து நிறுத்துவதற்கான உதவி கிடைக்கும்,” என்று ஆசிரியர்கள் விளக்குகின்றனர்.



உங்கள் நம்பிக்கைக்குரிய நபர் மற்றும் உங்களுக்கு உதவுபவர்களின் பெயர்களைக் குமிழிகளில் நிரப்பவும்.

**Women's Centre for Change**

பெண்கள் மறுமலர்ச்சி நிலையம் ஆதாய நோக்கற்ற ஓர் அமைப்பாகும். பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் இழைக்கப்படும் வன்முறையை முடிவுக்குக் கொண்டு வருவது, பாலினச் சமத்துவம் மற்றும் சமூக நீதியை நிலை உயர்த்துவது இதன் நோக்கமாகும்.


**எழுத்தாக்கம்**
Prema E. Devaraj

**மொழிபெயர்ப்பு**
Suseela Nagappan

**தொகுப்பு**
Hastiny Subramaniam

**சித்திரம்**
Faizati Mohd Ali

**வடிவமைப்பு**
C-Square Sdn Bhd, Penang

**பிரத்தியேக நன்றிகள்**
Tan Chin Chin, Khor Ai Na and Zuliana bt. Md. Dzulkifli

**ஆக்கம் மற்றும் வெளியீடு**
Women's Centre for Change

**ஆதரவு**
Yayasan Hasanah


© 2022, Women's Centre for Change, Penang

Scan to Donate
BRN: 267885
DuitNow QR
Women's Centre for Change


www.wccpenang.org
wcc@wccpenang.org
WCC Penang